## கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## இரண்டாம் வருட/முதலாம் அரையாண்டுக் கலைமாணித் தேர்வு 2013/2014
## (April/May, 2016), (Repeat)

# ECO 2101 Advanced Economic Theory

நேரம்: 03 மணித்தியாலங்கள்

**ஏதாவதேனும் நான்கு வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக.**

01. (அ) மொத்தப்பயன், எல்லைப்பயன் என்பவற்றை வரைபடத்தின் உதவியுடன் வேறுபடுத்துக.
(08 புள்ளிகள்)

(ஆ) அளவுசார் ஆய்வுக்கும் (Cardinal Utility), வரிசைசார் ஆய்வுக்கும் (Ordinal Utility) இடையிலான வேறுபாட்டை அடையாளப்படுத்துக.
(10 புள்ளிகள்)

(இ) சமபயன் வளைகோட்டு ஆய்வின்படி நுகர்வோன் சமநிலை எவ்வாறு பெறப்படும் என விளக்குக.
(07 புள்ளிகள்)
(மொத்தம் 25 புள்ளிகள்)

02. (அ) விலை நுகர்ச்சி வளைகோட்டினை வரைபட உதவியுடன் விளக்குக.
(07 புள்ளிகள்)

(ஆ) வருமான விளைவு, பதிலீட்டு விளைவு என்பவற்றை வேறுபடுத்திக் காட்டும் ஹிக்ஸ் (Hicks) மாதிரியை விளக்குக.
(08 புள்ளிகள்)

(இ) "விருப்பத் தெரிவினை அடிப்படையாகக்கொண்டு ஒரு பொருளுக்கான கேள்விக் கோடு பெறப்படுகின்றது" இக்கூற்றின் பொருத்தப்பாட்டினை போல் சாமுவெல்சனுடைய கோட்பாட்டினை அடிப்படையாகக் கொண்டு விளக்குக.
(10 புள்ளிகள்)
(மொத்தம் 25 புள்ளிகள்)

03. (அ) உற்பத்தித் தொழிற்பாடு என்றால் என்ன?
(06 புள்ளிகள்)

(ஆ) குறுங்கால உற்பத்தித் தொழிற்பாட்டினை வரைபடத்தின் உதவியுடன் விளக்குக.
(10 புள்ளிகள்)

(இ) குறுங்கால உற்பத்தித் தொழிற்பாட்டில் உற்பத்தித் தீர்மானம் எக்கட்டத்தில் மேற்கொள்ளப்படும் என்பதை விளக்குக.
(09 புள்ளிகள்)
(மொத்தம் 25 புள்ளிகள்)

04\. (அ) பொருளியலில் சந்தை என்றால் என்ன? எவ்வாறு ஒரு நிறைபோட்டி சந்தையில் ஒரு நிறுவனத்தினுடைய விலையானது சந்தையினால் தீர்மானிக்கப்படுகின்றது என்பதை சுருக்கமாக விளக்குக.

(10 புள்ளிகள்)

(ஆ) ஒரு நிறுவனம் அனுபவிக்கும் அகப்புறச் சிக்கனங்கள் யாவை?

(07 புள்ளிகள்)

(இ) தனியுரிமைப் போட்டிச் சந்தையினை விளக்குக.

(08 புள்ளிகள்)

**(மொத்தம் 25 புள்ளிகள்)**

05\. (அ) மொத்த நிலையானசெலவு, மொத்த மாறும்செலவு என்பவற்றை வரைபடத்தின் உதவியுடன் விளக்குக.

(04 புள்ளிகள்)

(ஆ) பின்வரும் மொத்தச் செலவுத் தொழிற்பாட்டை கவனத்தில் எடுக்குக.

$$TC = 1000+150Q^3+200Q^2$$

TFC, TVC, MC, AVC, AFC என்பவற்றைக் காண்க.

(10 புள்ளிகள்)

(இ) நீண்டகால சராசரிச் செலவினை வரைபடத்தின் உதவியுடன் விளக்குக.

(06 புள்ளிகள்)

(ஈ) நவீன செலவுக் கோட்பாடு பற்றி விளக்குக.

(05 புள்ளிகள்)

**(மொத்தம் 25 புள்ளிகள்)**

06\. பின்வருவனவற்றிற்கு சிறு குறிப்பு எழுதுக.

(அ) கேள்விக் கோட்பாடு

(ஆ) விலை நெகிழ்ச்சி

(இ) உற்பத்தி விரிவுப்பாதை

(ஈ) எல்லைத்தொழிநுட்ப பதிலீட்டு வீதம்

(உ) சமபயன் வளையி

**(05 x 05 = 25 புள்ளிகள்)**

*************************************